UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19 - 4 Oct - Dec 2025

Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# தணிகைப் புராணம் காட்டும் தீர்த்தச் சிறப்புகள்

**ச. சிவரக்ஷவி**
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்)

**முனைவர் சு. சதீஷ்குமார்**
முதுநிலை உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (அரசு உதவிபெறும் பிரிவு)
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
கோயம்புத்தூர் - 641 029.

**ஆய்வுச் சுருக்கம்**

புராணங்கள் என்பது முன் நிகழ்ந்தத் தொன்மங்களை எடுத்துரைக்கும் இலக்கியங்களாகத் திகழ்கின்றது. அதில் தலபுராணங்கள் இறைவன் உறைகின்ற தலத்தின் சிறப்புகளையும் இறைவனின் அருட் செயல்களைப் பற்றியும் அத்தலத்தினைச் சுற்றியுள்ள தீர்த்தங்களின் சிறப்பினையும் எடுத்துரைப்பதாக விளங்குகின்றது.

**"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையில் தொடங்கினார்க்கு ஓர்**
**வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"** (தாயுமானவர், பராபரக்கண்ணி. கண்ணி எண்-156) மேற்கூறப்பட்டவாறு மூர்த்தி தல தீர்த்தச் சிறப்பினை முத்தமிழ் சான்றோர்கள் மொழிந்திருப்பது குறிப்பிடத்தக்கது. தீர்த்தம் என்பது அத்தலத்திற்குரிய ஊற்று நீர், கிணற்று நீர் தெப்பக்குள நீர் மற்றும் ஆற்று நீர் ஆகியவற்றை குறிக்கின்றது. ஒரு தலத்தில் இருக்கும் புனித நீருக்கு தீர்த்தம் என்று பெயர். இறைவன் உறைகின்ற தலத்தில் இருக்கக்கூடிய தீர்த்தங்கங்களில் நீராடுவதன் மூலம் மக்கள் வீடு பேற்றினை அடைந்து சிறப்புறுவது இலக்கியங்களில் கூறப்பட்ட மரபு ஆகும். அவ்வாறாக திருத்தணிகை மலையில் அமையப்பெற்ற சிவகங்கைத் தீர்த்தம், குமார தீர்த்தம், பிரம்ம தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம், இந்திர தீர்த்தம் மற்றும் நாக தீர்த்தம் போன்ற தீர்த்தங்களின் சிறப்பினையும் அத்தீர்த்தத்தில் நீராடியோர் எய்தும் பயன்களையும் திருத்தணிகை புராணம் காட்டும் வழி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**முதன்மைச் சொற்கள்**

புனிதத் தீர்த்தம், நீராடுதல், திருத்தணிகை, சிவகங்கைத் தீர்த்தம், குமார தீர்த்தம், பிரம்ம தீர்த்தம் அல்லது சரஸ்வதி தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம், இந்திர தீர்த்தம் மற்றும் நாக தீர்த்தம். தீர்த்தத்தில் நீராடுவோர் எய்தும் பயன்.

**முன்னுரை**

தமிழில் இயற்றப்பெற்ற தலபுராணங்கள் மூர்த்தி தலம் தீர்த்தத்தின் சிறப்பினைக் கூறுவது மட்டுமல்லாமல் பலவேறு தொன்மங்களைக் கூறுவதாக அமைகின்றது. அவ்வாறாக கச்சியப்பரால் இயற்றப்பட்ட திருத்தணிகை புராணம் பதினெண் படலங்களைக் கொண்டு விளங்குகின்றது. இப்புராணமானது முருகனின் ஐந்தாம் படை வீடான திருத்தணி மலையின் சிறப்புகளினைக் கூறும் களஞ்சியமாகத் திகழ்கின்றது. முருகப்பெருமாளின் கருணை, வீரம், அன்பு, அருட்செயல்கள் ஆகியவை அதிகப்படியாக கூறப்பட்டுள்ளது.

**"சென்றாடு தீர்த்தங்கள் ஆனார் தாமே"** (6-78-1) இறைவனே தீர்த்தமாகத் திகழ்கிறான் என்று திருநாவுக்கரசர் கூறுகின்றதற்கேற்ப திருத்தணிகை மலையில் அமைந்துள்ள தீர்த்தங்களின் சிறப்புகளும் மிகுதியாக கூறப்பட்டுள்ளது. அவ்வாறாக திருத்தணிகை மலையில் அமைந்துள்ள ஏழு தீர்த்தங்களின் சிறப்பினைப் பற்றியும் அத்தீர்த்தத்தில் நீராடுவோர் எய்தும் பயனினையும் இக்கட்டுரை சுருக்கமாக எடுத்தியம்புகின்றது.

**தணிகை மலையில் அமைந்துள்ள தீர்த்தங்கள்**

தலத்தில் அமையப்பெற்ற தீர்த்தத்தின் சிறப்பினைக் கீழ்காணும் திருவிளையாடற் புராண பாடல் அடிகள் காட்டுகின்றது.

**"இத்தலத்துக் கொப்பாக வொருதலமும் பொற்கமலமென்னுமிந்த**
**வுத்தமமா தீர்த்தத்துக் கொப்பதொரு தீர்த்தமு மெய்யணர்வானந்த**
**வித்தனைய விலிங்கமிதற் கொப்பாவோ ரிலிங்கமுப்பார் விண்மே லென்னு**
**முத்தலத்து மிலையந்த மூர்த்தி திருநாமங்கள் மொழியக் கேண்மின்"** (திருவிளையாடல்புராணம், மூர்த்தி விசேடப்படலம், பா. எண் - 32)

திருத்தணிகை மலையில் அமைந்துள்ள தீர்த்தங்கள் கீழ்காணுமாறு.

*சிவகங்கைத் தீர்த்தம்*
*குமார தீர்த்தம்*
*பிரம்ம தீர்த்தம் அல்லது சரஸ்வதி தீர்த்தம்*
*விஷ்ணு தீர்த்தம்*
*இந்திர தீர்த்தம்*
*நாகத் தீர்த்தம்*

**சிவகங்கைத் தீர்த்தம்**

சிவகங்கைத் தீர்த்தம் என்பது சிவபெருமானால் உருவாக்கப்பட்ட தீர்த்தமாகும். இது சிவபெருமானின் திருச்சடையில் குடிகொண்டுள்ள கங்கை நதியாகும். திருக்கைலாயத்தில் அம்மையும் அப்பரும் அமர்ந்திருக்க அவர்களுக்கு மத்தியில் முருகப்பெருமான் எழுந்தருளி இருந்தார். அப்பொழுது முத்தியைப் பெற விரும்பிய கணத்தலைவனானச் சந்திரகாசன் என்பவன் அங்கு வந்து சிவபெருமானின் திருவடிகளில் விழுந்து வணங்கி பிரணவப் பொருளை அருளுமாறு வேண்டினான். சிவபெருமானும் அவர் விருப்பப்படியே பிரணவப் பொருளினை மொழிந்து ஆசி வழங்கினார். முருகப் பெருமான் பிரணவப்பொருளுனை அறிந்து கொண்டு அறியாதவர் போல் அமர்ந்திருந்தார். நாட்கள் கழிய அம்மையப்பரை நீங்கி கயிலை மலையில் உள்ள திருக்கோயில் முருகப்பெருமான் எழுந்தருளி இருந்தார். சிவபெருமானை வணங்க வரும் தேவாதி தேவர்கள் முனிவர்கள் அனைவரும் சிவபெருமானின் மறு வடிவமான முருகப்பெருமானை வணங்கி ஆசி பெற்று சென்றனர். அப்பொழுது அகங்காரம் கொண்ட பிரம்மன் முருகனை சிறுவனே என்று எண்ணி முருகப் பெருமானை வணங்காமல் சென்றார் கோபம் கொண்ட முருகப்பெருமான் பிரம்மனைச் சிறை பிடித்து வருமாறு வீரவாகுவிடம் கட்டளையிட்டார். செய்தி அறிந்த சிவபெருமான் முருகப்பெருமானிடம் விசாரிக்க முருகப்பெருமான் சிவபெருமானிடம் பிரணவப் பொருளினை அறியாதவனான பிரம்மனுக்கு எவ்வாறு நீங்கள் படைக்கும் தொழிலினை கொடுத்தீர்கள் என்று கேட்க சிவபெருமான் பிரணவப்பொருளுடன் அறிந்தவனாய் நீ கூறுவாயாக என்று கேட்டார். எவ்வகை பொருளையும் திருவாய் மலர்ந்தருள முறை என்பது ஒன்று உண்டு என்று கூறி அனைவரையும் தணிகை மலைக்கு வரும் படி திருவாய் மலர்ந்தருளினார்.

சிவபெருமான் தணிகை மலையினை வந்தடைந்து சிலமணித்துளிகள் தவத்தினைச் செய்தார். தணிகை மலையில் வீராட்டகாசம் என்னும் இடத்தில் முருகப்பெருமானுக்கு வழிபாடு செய்வதற்குப் பொருத்தமான நல்ல தீர்த்தத்தினை உண்டாக்கத் தனது திருச்சடையில் இருக்கும் கங்கை நீரினைப் பாய்ச்சி நிறையச் செய்தார். சிவபெருமானின் திருச்சடையில் இருந்து தோன்றியதால் இது சிவகங்கைத் தீர்த்தம் என்னும் சிறப்புப் பெயரைப் பெற்று விளங்கியது.

சிவகங்கை என்னும் தீர்த்தத்தில் மூழ்கினோர் குற்றம் பொருந்திய பிணிகள் நீங்காதான எல்லாம் நீங்கப் பெற்று இன்மையில் போகமும் வறுமையில் வீடு பேற்றினையும் அடைவார்கள் என்று கச்சியப்பர் குறிப்பிடுகின்ற பாடல் அடிகள் கீழ்காணுமாறு,

**"பொத்துநோய் தீரா தனவெலாந் தீர்ந்து போகமும் வீடுமெய் துவரால்"**(தணிகை புராணம் விளக்க உரையுடன், ப.எண் 254)

இறைவனோடு ஒன்று சேர்ந்து வந்த தேவர்கள் சிவகணங்கள் முதியோர் சிவகங்கையில் மூழ்கி திருக்கரத்தில் வேலினை உடைய முருகப் பெருமானோடு சிவபெருமானையும் வணங்கினால் எல்லா வற்றிலும் கொடிய உடல் உயிர்களைப் பிடித்துள்ள நோய்களை நிச்சயமாக நீக்கி வரங்களை எல்லாம் பெற்றனர். பின்னர் சிவலிங்க கங்கையில் மூழ்கி இன்றைய நாள் வரையும் பெரிய பிணிகளை நீக்கியவர்களை எண்ணினால் அது அளவற்றனவாய் சென்று கொண்டிருக்கும் என்று கச்சியப்பர் குறிப்பிடுகின்றார்.

வேற் படையைப் பெற விரும்பிய முருகப் பெருமானும், முத்தமிழை அறிய விரும்பிய அகத்தியரும் இழந்த செல்வத்தை பெற விரும்பிய இந்திரனும் இச்சிவகங்கையில் நீராடி பின்னர் தாங்கள் விரும்பியவற்றை எய்தினர் என்று தணிகைப்புராணம் சுட்டுகின்றது.

**குமார தீர்த்தம்**

குமார தீர்த்தம் என்பது முருகப்பெருமானால் உருவாக்கப்பட்ட தீர்த்தமாகும். இத்தீர்த்தம் கயிலை மலையில் தங்கிய கங்கை நதி என்ற குறிப்புகள் குமரேச படலம் என்னும்

படலத்தில் காணக் கிடைக்கின்றது.

முருகப்பெருமான் சந்திரனைத் திருச்சடையில் ஏந்திய சிவபெருமானிடம் ஞான் சக்தியாகிய வேற் படையினைப் பெறக் கருதி அரிய தவத்தினைச் செய்ய திருத்தணிகை மலையினை வந்தடைந்தார். ஒளி பொருத்திய கங்கை நதி தணிகை மலைக்கு வரவேண்டும் என்று திருவள்ளத் திலே நினைக்க கங்கை நதியானது தணிகை மலையின் அடிவாரத்தின் எதிரே வந்து பொருந்தியது. இத்தீர்த்தம் முருகப்பெருமா னால் அழைக்கப்பெற்று முருகப்பெருமான் மூழ்கிய தீர்த்தம் ஆதலால் இது குமார தீர்த்தம் என்னும் பெயர் பெற்று விளங்குகிறது.

குமார தீர்த்தத்தில் மூழ்கினோர் எய்தும் பயனை விட குமாரதீர்த்தம் என்னும் திருப் பெயரை நினைத்தவர்களுடைய ஏழு பிறவி யில் உள்ள துன்பங்களும் எழுந்தோடும் வண்ணம் வருந்தும் என்ற செய்தி கீழ்க்காணும் வரிகளில் மூலம் புலப் படுகின்றது.

**"உள்ளினவ ரெழுபவத்திற் காதரமு மெழுந்திரிய வுருக்கு மாலோ"** (தணிகை புராணம்விளக்க உரையுடன், ப.எண் 271) மாசி மாதம் வருகின்ற மகநாளில் குமரக் கடவுள் இளிதாக மூழ்கி சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்த வாசனை வெளியிடுகின்ற பூக்கள் நிறைந்த குமார தீர்த்தத்தில் சென்று மூழ்கி குமார இலிங்கத் தினை வழங்குபவர் மலக்குற்றங்கள் நீங்கி தேவர்களும் பெற அரிதாகிய சிவலோகத் தினை எக்காலமும் பொருந்தி இருப்பார்.

ஒருமுறை இத்தீர்த்தத்தில் மூழ்கினால் எவ்வகை நோய்களும் நீங்கப்பெற்று, போகமும், அறிவும், ஆயிலும், சுத்தமும், புகழும், வீரமும், வலிமையும், பொருளால் மேம்படுதலும், சிவேகரும். மனைவியரும் முதலிய செல்வங்களை எல்லாம் பெற்று முடிவில் சுற்றத்தோடு கந்தலோகத்தினை அடைவார்கள் என்று தணிகைப் புராணம் சுட்டுகின்ற குறிப்பு கீழ்காணுமாறு.

**"எத்தின த்தா யினுமொருகான் முழுகினரெப்**
**பிணியுமெழு காத மோப்பிப்**
**புத்தியறி வாயுள்சுசி புகழ்சூழ்ச்சி வீரம்வலி**
**பொருண்மேம் பாடு**
**மித்திரர்புத் திரர்மனைவி முதலான**
**வெறுக்கையெலா மேவி யீற்றில்**
**கொத்தினொடுங் கந்தலோ கத்தையவ**
**லுருக்கொண்டு குறுகி வாழ்வார்"**

(தணிகைப்புராணம் விளக்க உரையுடன், ப.எண் -272)

தான் இழந்த செல்வத்தினைப் பெற விரும்பியும் படைத்தல் தொழில் கை கூடாததாலும் பிரம்மனும், தாம் இழந்த செல்வத்தைப் பெற விரும்பிய இந்திரனும், திருமாலும்; முத்தமிழை அறிய விரும்பிய அகத்தியரும் தம் உடலில் ஏற்பட்ட காயங்கள் நீங்க வாசுகியும், சிவஞானத்தைப் பெற விரும்பிய இராமனும் இக்குமார தீர்த்தத்தில் நீராடிய பின்னரே தவமிருந்து தாங்கள் வேண்டியவற்றைப் பெற்றனர்.

**பிரம்ம தீர்த்தம்**

முருகப்பெருமானால் சிறையில் இடப்பட்ட பிரம்மதேவன் சிவபெருமானால் விடுதலை செய்யப்பட்டு படைத்தல் தொழிலைச் செய்ய முற்பட்டான். அப்பொழுது படைத்தல் தொழில் கை கூடாததால் திருக்குற்றாலத் திற்குச் சென்று சிவபெருமானை எண்ணித் தவம் செய்தனன், அப்பொழுது சிவபெருமான் காட்சியளித்து பிரம்ம தேவரிடம் நீ கேட்ட வரத்தினை வழங்க முருகப்பெருமானால் மட்டுமே இயலும் என்று திருவாய் மலர்ந்து அருளினார். சிவபெருமானின் வாய்மொழிக்கு இணங்க பிரம்மதேவன் திருத்தணிகை மலைக்குச் சென்று சுனை ஒன்றினைக் கண்டு அதில் தினமும் மூழ்கி தவத்தினைப் பூண்டான். முப்பொழுதும் பிரம்மன் மூழ்கி தவம் செய்தச் சுனை முருகன் அருளால் பிரம்ம தீர்த்தம் என்னும் பெயரினைப் பெற்றது.

**"காசி ஒத்த பூரணைவி சாகம டுத்த**
**வொண்மை யாலிவைய டுத்துறு காலைப்**
**பைத்த விப்புனல்ப டிந்தவர் மும்மைப்**
**பாத கங்கள்பல வந்தப நூறி**
**மெத்து செல்வமலி யென்னுல கெய்தி**
**வீற வுங்கருணை நல்குதல் வேண்டும்"** (தணிகைப்புராணம் விளக்க உரையுடன். 313) என்ற தணிகைப் புராண பாடல் அடிகள் குறிக்கின்றவாறு பிரம்ம தேவன் ப.எண் முருகப்பெருமானிடம் யாம் மூழ்கி வழிபட்ட நாளான வைகாசி திங்களோடு பொருந்திய பூரணையில் விசாக நாள் பொருந்திய மேன்மையால் இவை ஒன்று சேர்ந்த காலத்து இத்தீர்த்தத்தில் ஆடினோர் மூவகையால் வருகின்ற பாவங்கள் எல்லாவற்றையும் கெடுத்து நிறைந்த செல்வம் பொருத்திய அடியேன் வாழ்கின்ற சத்திய லோகத்தை அடைந்து வேறொருவருக்கும் இல்லாத பெருமையை அடையும் கருணைச் செய்தல் வேண்டும் என்று முருகப் பெருமானிடம் வரத்தினை வேண்டிப் பெற்றார்.

சூரபத்மனால் இழந்த தனது செல்வங்கள் அனைத்தையும் மீட்க வேண்டிய பிரம்ம தேவனும் சரஸ்வதியும் திருத்தணியை அடைந்து முருகப்பெருமானை எண்ணி தவம் செய்தனர். அவர்கள் கேட்ட வரத்தினை அழித்த முருகப்பெருமான் அவர் களின் வேண்டுகோளுக்கிணங்க பிரம்ம

தீர்த்தம் அன்றிலிருந்து சரஸ்வதி தீர்த்தமாக அழைக்கப் பெற வரமளித்து அருள் புரிந்தார். மேலும் மார்கழி திங்களின் திருவாதிரை நாள் கூறிய பூரண எதிர்காலத்தை வரும் நன்னாளிலே தீர்த்தம் நிரம்பிய இச்சுனையில் நீராடி இவ்விடத்தில் உள்ள இறைவனுடைய திருவருட்குரியைக் கண்டு பணிவோர் உலகிலே கூறப்பட்ட 14 கல்வியையும் நன்கு பயின்று நான்கு வகை பட்ட செய்யுளை இயற்றும் வன்மையை உடைய நல்லிசைப் புலவராக வரம் அருளுதல் வேண்டும் என்று பிரம்மதேவன் முருகப்பெருமானிடம் கேட்ட வரத்தினைக் கீழ்காணும் பாடல் வரிகள் புலப்படுத்து கின்றது.

**"சீர்க லந்துவளர் தெய்வ யானைபுணர்**
**செல்வ நீவரம்வ ழங்குமிம்**
**மார்க ழிச்செழும திக்க ணாதிரை**
**மரீஇய பூரணைவ ருந்தினம் நீர்க லந்தசுனை யாடி யிவ்வயி**
**விறுத்த சோதியுரு நோக்குவோர்**
**பார்க லந்தபதி னான்கு கல்வியும்**
**பயின்று நாற்கவியு மாதலே"**

(தணிகைப்புராணம் விளக்க உரையுடன், தொகுதி 2. ப.எண் 874)

இழந்த செல்வத்தைப் பெற விரும்பிய இந்திரனும், சிவஞானத்தை பெற விரும்பிய இராமபிரானும் இப்பிரம்ம தீர்த்தத்தில் நீராடிய பின்னர் தவமிருந்து வேண்டிய வரத்தினை பெற்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.

**விஷ்ணு தீர்த்தம்**

இழந்த செல்வத்தினை அடைய விரும்பிய திருமால் திருத்தணிகை வந்தடைந்து, செங்கலுநீர் விநாயகர் கோயிலுக்கு எதிரில் ஒரு சுனையைக் கண்டு தினந்தோகும் அத்தீர்த்தத்தில் மூழ்கி முருகப்பெருமானைத் தவம் செய்தார். திருமால் மூழ்கி தவம் செய்ததால் அத்தீர்த்தம் விஷ்ணு தீர்த்தம் என்னும் பெயரோடு விளங்குகிறது.

விஷ்ணு தீர்த்தத்தில் மூழ்கினோர் எய்தும் பயன்களாக திருமால் முருகனிடம் பெற்ற வரங்கள் கீழ்காணுமாறு,

**பங்குனி யுத்திரம் பாற்கரன் வாரமும்**
**தங்கிய தின்னரு டந்தரு ளித்தினம்**
**இங்கிதி லீச்சுனை யிர்ம்புன லாடுவோர்**
**எங்கணும் வேட்டன் வெய்துக வென்றான்**

(தணிகைப்புராணம் விளக்க உரையுடன் தொகுதி -2,ப.எண் -886) என்ற வரிகளில் உள்ளவாறு முருகப்பெருமான் திருமாலுக்கு வரம் அளித்த இந்த பங்குளி திங்கள் உத்திர நாளும் ஞாயிற்றுக்கிழமையும் பொருந்தப் பெற்றுள்ள நாளில் ஆண்டு தோறும் இங்கு நிகழும் நாளிலே இச்சுனை யில் குளிர்ந்த நீரின்கண் நீராடுபவர் எவ்வுலகத்தும் தாம் விரும்பிய பேறுகளை எய்த வரம் தருதல் வேண்டும் என்று வரம் கேட்க, முருகப் பெருமானும் அவ்வாறே அருள் புரிந்தார்.

**இந்திர தீர்த்தம்**

சூரபதுமனால் இழந்த தன் செல்வங்களை மீட்டுப் பெற வேண்டிய இந்திரன் சிவபெரு மானை எண்ணித் தவம் செய்து சிவபெரு மான் காட்சியளித்து தணிகை மலை முருகனிடம் பெற்றுக் கொள்வாயாக என்று திருவாய் மலர்ந்தருள மகிழ்ச்சியற்ற இந்திரன் திருத்தணியை அடையப் புறப்பட்டு திருத்தணிகை மலையினைக் கண்டு மகிழ்ச்சியுற்று வணங்குதல் செய்து. "சீர்த்த கோயிலி னண்மை யிற்சுனை தென்பு றத்தெதிர் கண்டனன்" (தணிகைப் புராணம் விளக்க உரையுடன், தொகுதி 2 ட எண் 892) என்ற வரிகளில் உள்ளவாறு திருக்கோயிலின் தென்புறத்தில் ஒரு சுனையினைக் கண்டாள். அச்சுனைக்கு விண்ணுலகத்தில் இருக்கக்கூடிய செங்கழுநீர் மலரினை வரவழைத்து முப்பொழுதும் அம் மலரினை மலரச் செய்தார். இந்திரன் மூழ்கி தவம் செய்த தீர்த்தம் ஆதலால் அது இந்திரதீர்த்தம் என்ற பெயரினைப் பெற்றது.

இவ்விந்திரத் தீர்த்தத்தில் மூழ்கினோர் எய்தும் பயன்களாகக் கச்சியப்பர் குறிக்கின்றவை கீழ்காணுமாறு,

**"செம்மனீ காட்சி தந்த திருத்தகு மிந்த நாளில்**
**பைம்மலர்ச் சுனைநீர் தோய்ந்தோர் பருகினோர் தெளித்துக் கொண்டோர்**
**வெம்மைவல் வினைக ளோப்பி விளங்குநின் னுலகஞ் சேர்க"**

(தணிகைப்புராணம் விளக்க உரையுடன், தொகுதி 2. 11.616301 896) என்ற பாடலிகள் குறிக்கின்றவாறு முருகப்பெருமான் இந்திர னுக்கு காட்சி வழங்கிய செல்வத் தகுதி பெற்ற இந்த நன்னாளிலே ஆண்டுதோறும் செங்கழு நீர் மலர் சுனை நீரிலே ஆடினோறும் அதனைப் பருகினோறும் தலைமீது தெளித்துக் கொண்டோரும் ஆகிய அன்பர் அனைவரும் செவ்விய தீவினைகளை அகற்றித் திகழும் கந்த உலகினை எய்தி இன்புற்றிருப்பர் என்று முருகப்பெருமானிடம் வரம் பெற்றுக் கொண்டார்.

**நாகத் தீர்த்தம்**

முன்னொரு காலத்தில் அமுதம் பருக விரும்பிய தேவர்களும் அவுணர்களும் பாற் கடலினைக் கடைய மந்திர மலையை மத்தாகவும் வாசுகியினைக் கயிறாகவும் கொண்டு கடலினைக் கடைந்தனர். உடல் காயமுற்ற வாசுகி தனது காயத்தினைச் சரி செய்ய திருத்தணிகையை வந்தடைந்தது.

"ஒன்றிய தண்சுனை யொன்றெதிர் கண்டவ ணுற்றாடி" (தணிகைப் புராணம் விளக்க உரையுடன், தொகுதி 2, ப-எண் 901) என்ற வரிகள் சுட்டுகின்றவாறு தணிகை மலையின் மேற்கு திசையில் பொருந்திய குளிர்ந்த சுனை ஒன்றினைக் கண்டு அதில் நீராடி மனம் கமழுகின்ற கடப்ப மாலை அணிந்த மார்பினை உடைய முருகப்பெருமானின் தாமரை மலர் போன்ற திருவடிகளை எண்ணி வாசுகி வழிபட்டது.

வாசுகி நீராடியதால் அது நாகதீர்த்தம் என்னும் சிறப்புப் பெயரைப் பெற்று விளங்கியது.

இந்நாக தீர்த்தத்தில் மூழ்கினோர், வலிமையை எய்த விரும்புவோரும். தமக்குற்ற நோய் நீங்குவதற்கு விரும்புவோரும், புகழை விரும்புவோரும், செல்வத்தை விரும்பிய வரும், ஒப்பில்லாத வல்லமை உடையவராக விரும்புவோரும் இந்நாக சுனையின்கண் மகிழ்ச்சியோடு மூழ்கினால் முருகப்பெருமா னுடைய திருவருளால் தான் விரும்பிய வற்றினை விரைவிலே பெறுவர் என்று தணிகை புராணம் சுட்டுகின்ற பாடல் அடிகள் கீழ்காணுமாறு.

**"திண்மைவி ழைந்தவர் நோய்தனி தீரவி ழைந்தோர்கள்**
**ஒண்மைவி ழைந்தவர் செல்வம்வி ழைத்தவ ரொப்பற்ற**
**வண்மைவி ழைந்தவர் நாகசு னைக்கண்ம கிழ்ந்தாடின்**
**அண்மையி னெய்துப வண்ணல ருட்கொரி லக்காகி"**

(தணிகைப்புராணம் விளக்க உரையுடன், தொகுதி 2, ப.எண் 902)

**நிறைவுரை**

தணிகை மலையில் உள்ள புண்ணிய தீர்த்தங்களானச் சிவகங்கை தீர்த்தம், குமார தீர்த்தம், பிரம்ம தீர்த்தம், சரஸ்வதி தீர்த்தம், நந்தி நந்தினி, விஷ்ணு தீர்த்தம், இந்திர தீர்த்தம், நாக தீர்த்தம், நாரதன் தீர்த்தம், அகத்தியர் சுனை ஆகிய அனைத்துத் தீர்த்தமும் விண்ணுலகத்தில் உள்ள தீர்த்தங்களின் சிறப்பினை விட மேலானது என்ற கருத்தினை அறிந்த அகோரம் என்னும் அந்தணன், திருத்தணிகை மலை யினை அடைந்து அங்குள்ள புண்ணிய தீர்த்தங்களிலே ஆடி உளமாற முருகப் பெருமானை வழிபட்டு வீடு பேற்றினை அடைந்தான்.அகோரம் என்னும் அந்தணன்.

**"விண்டு தீர்த்தம்வெய் யவன்றினம் வெண்மதி வாரத்**
**தண்ட ராட்டறாச் சிவகங்கை யலைநதி யிரண்டும்**
**தொண்டர் போற்றிய நாரதன் சுனையொடு நாகம்**
**கண்ட தீர்த்தமுங் கண்ணகள் புவிமகன் வாரம்"**
**"பிரம தீர்த்தத்துப் புதன்றினம் பிலிற்றுதேங் காவி**
**விரவு தீர்த்தத்து வியாழத்தின் கிழமைவெள் ளியினாள்**
**பரவு சீர்ப்பெருங் குமாரதீர்த் தம்பகர் சனிநாள்**
**உரவு நீர்க்குறு முனிசுனை யுற்றவன் படிந்தான்"**

(தணிகைப்புராணம் விளக்க உரையுடன், 2. ப.எண் 1401) என்ற பாடல் அடிகள் உணர்த் தும் வண்ணம் திருமால் தீர்த்தத்திலே தொகுதி ஞாயிற்றுக்கிழமையும், திங்கட் கிழமையில் தேவர்கள் ஆடி ஒழுகிய சிவகங்கையினும் நாரதன் சுனையிலும் நாகம் கண்ட தீர்த்தத்திலும், செவ்வாய்க் கிழமையில் பிரம்ம தீர்த்தத்தினும், புதன் கிழமை தேன் சொறியும் செங்கழுநீர் மலரும் தீர்த்தத்திலும், வியாழக்கிழமையும் வெள்ளிக்கிழமையும் புகழினை உடைய குமார தீர்த்திலும், சனிக்கிழமை பெரிய அகத்தியன் சுனையினும் பொருந்தி வீடு பேற்றினைப் பெற்றனன் என்பதை அறியலாம்.

பண்டொரு காலத்தில் தோன்றிய இப்புனித தீர்த்தங்கள் இன்றும் மனித குலத்திற்கான மேன்மையை சேர்க்கும் வண்ணம் திகழ்கின்றது. கச்சியப்பர் குறிப்பிட்ட தீர்த்தச் சிறப்பினை அறிந்து பயன்படுத்திக் கொள்வோமாக.

**துணைநூல்பட்டியல்**

1. தணிகைப் புராணம் விளக்கவுரையுடன், தொகுதி–1 & 2 திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி 6, சென்னை-1 (முதல் பதிப்பு-1965)
2. தாயுமானவர், தாயுமானவர் சுவாமி பாடல்கள், ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் வெளியீடு, திருப்பாராய்த் துறை, முதற்பதிப்பு 1980.
3. பரஞ்சோதி முனிவர், திருவிளையாடல் புராணம், மதுரை காண்டம், முருகவேள் புத்தகசாலை. இராயப்பேட்டை, சென்னை 1937.
4. வசந்தகுமார், டாக்டர்.இராச (ப.ஆ). ஆறாந் திருமுறை, பன்னிரு திருமுறை ஆய்வு மையம், கற்பகம் பல்கலைக் கழகம், ஈச்சநாரி. கோவை 21.